பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

பொது சன நூலகம்
12 NOV 1996
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 122 | 26—07—1996
இதழ்: 2 | விலை ரூபா 5-00

**அருள் வாக்கு**

"அமைதி ஏற்படுத்துவோர்
பேறுபெற்றோர் ;
ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள்
என அழைக்கப்படுவர்". (மத். 5:9)

## யாழ். ஆயரின் சமாதானத்திற்கான முயற்சிகள்

**யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கொழும்பில் சந்தித்து பேசினார்.**

சமாதான முயற்சிகள் மற்றும் வடபகுதி மக்களின் அவசிய தேவைகள் குறித்தும் ஆயர் ஜனாதிபதியுடன் பேசினார்.

இச்சந்திப்பின்போது ஆயருடன் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மல்கம் றஞ்சித் ஆண்டகையும் சமூகமளித்திருந்தார்.

இதேவேளை வன்னிப்பகுதியில் தங்கியிருந்தபோது யாழ். ஆயர் விடுதலைப்புலிகளின் தலைவர்களையும் சந்தித்து சமாதானத்திற்கான வழிமுறைகள் குறித்து உரையாடியுள்ளார்.

## செபமாலைத் தாசர் சபை குருக்கள்

செபமாலை தாசர் சபையைச் சேர்ந்த அருட்செல்வன் ம. டொன் பொஸ்கோ, அருட்செல்வன் செ. பிரான்சிஸ் ஜெயம், அருட்செல்வன் செ. யஸ்ரின் ஆகிய மூவரும் 08-05-96இல் மன்னார் ஆயர் மேதகு ஆர். யோசவ் அவர்களால் இறைவனின் புதிய குருக்களாக கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

இம்மூவரும் யாழ், கோவில் வீதி அருள் ஆச்சிரமத்தில் இருந்து முதன் முதலாக வெளியேறிய குருக்களாவர். அருட்செல்வர்கள் டொன் பொஸ்கோ பிரான்சிஸ் ஆகிய இருவரும் யாழ். பேராலய பங்கைச் சேர்ந்தவர்கள். அருட்செல்வன் யஸ்ரின் திருகோணமலையைச் சேர்ந்தவர்.

அருட்திரு பிரான்சிஸ் ஜெயம் தற்போது யாழ் அருள் ஆச்சிரமத்தில் பணியாற்றுகிறார்.

## குருத்துவ திருநிலைப்படுத்தல்

### மன்னாரில்

மன்னார் எழுத்தூரைச் சேர்ந்த அருள்செல்வன் மார்க்கஸ், வங்காலையைச் சேர்ந்த அருள்செல்வன் யூட் குரூஸ் இருவரும் 31.07.96 அன்று மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் ஆயர் ஆர். யோசப் ஆண்டகையால் இறைவனின் புதிய குருக்களாக திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

### புதுக்குடியிருப்பில்

அருள்செல்வன் ஆனந்தக் குமார், அருள்செல்வன் றெக்ஸ் சவுந்தரா ஆகிய இருவரும் இறைவனின் புதிய குருக்களாக ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் இம்மாதம் 11ஆம் திகதி இத் திருநிலைப்படுத்தல் நடைபெற்றபோது பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

அருள்செல்வன் ஆனந்தக் குமார் தெல்லிப்பழை பங்கைச்சேர்ந்தவர். அருள்செல்வன் றெக்ஸ்சவுந்தரா பலாலி பங்கைச் சேர்ந்தவர்.

## சாவகச்சேரியில் புனித லிகோரியார் ஆலயத் திருவிழா

சாவகச்சேரி, புனித லிகோரியார் ஆலயத் திருவிழா ஆடி மாதம் 26ஆந் திகதி ஆரம்பமாகி ஆவணிமாதம் 4ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 (புதிய நேரம்) மணிக்கு திருவிழாத் திருப்பலியுடன் நிறைவுறும்.

மாலை வழிபாடுகள் தினமும் 5.30 (புதிய நேரம்) மணிக்கு ஆரம்பமாகும்.

## மடு ஆடித் திருநாள்

மடுத்திருப்பதியில் ஆடி 2-ம் திகதி திருநாள் திருப்பலி யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

பெரும் திரளான பக்தர்கள், இடம் பெயர்ந்தோர் ஆடித் திருநாளில் கலந்துகொண்டனர்.

## மேற்படிப்புக்காக

கரவெட்டி பங்குத்தந்தை அருள்திரு. பீ. ஜே. ஜெபரட்ணம் அவர்கள் உயர் கல்விக்காக பெங்களூர் பயணமானார்.

* * *

அருள்திரு. ஜி. வி. பிலேந்திரன் அவர்கள் ஆய்வு ஒன்றுக்காக றோமாபுரி சென்றுள்ளார்.

* * *

அருள்திரு. ஆர். ஸ்ரலின் அவர்களும், அருள்திரு ஆர். சி எக்ஸ். நேசராஜா அவர்களும் பயிற்சிக்காக பிலிப்பைன்ஸ் சென்றுள்ளனர்.

* * *

புனித பத்திரிசியார் கல்லூரி உப அதிபராக பணிபுரிந்த அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் உயர் கல்வி கற்பதற்காக இங்கிலாந்து செல்கிறார்.

* * *

அருட்திரு ஞானரட்ணம், அருட்திரு ஜெயரஞ்சன் ஆகியோர் உயர் கல்விக்காக றோமாபுரி செல்கின்றனர்.

* * *

## சிலாபத்தில் "வெண்புறா"

சிலாபம் புனித பிரான்சீஸ்கன் நவசன்னியாச மாணவர்கள் தமதுஎழுத்து பயிற்சிக்களமாகவும் தொடர்புசாதன ஊடகமாகவும் "வெண்புறா" எனும் சிற்றேடு ஒன்றினை வெளியிட்டு வருகிறார்கள்.

இம்மாணவர்களின் வழிகாட்டலுக்கு துணையாகிய அதிபர் அருட்சகோதரர் தொபிதாஸ்C. M. S. F அவர்கள் ஆறு ஆண்டு பணியை நிறைவுசெய்து 15.8.96இல் மட்டக்களப்பு குருக்கள் மடத்திற்கு 'அசிசி இல்லம்' மாற்றலாகி செல்வதால் இப்பணியினை தொடர அருட்சகோதரர் இக்னேசியஸ் C. M. S. F. பொறுப்பேற்கிறார். இப்பிரியாவிடை சிறப்பிதழ் வெண்புறாவின் 4ஆவது இதழாக மலரவிருக்கிறது.

## வன்னிப் பகுதியில் மனித முன்னேற்ற நடுநிலையப் பணிகள்

மனித முன்னேற்ற நடுநிலையம் வன்னிப் பெருநிலப்பரப்பில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு சுமார் 780 வீடுகளை வழங்கியுள்ளது. மேலும் பல வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன,

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு தூர இடங்களில் உள்ள பரீட்சை நிலையங்களுக்குப் போய்வரபோக்குவரத்து வசதிகளையும் மனித முன்னேற்ற நடுநிலையம் செய்திருந்தது.

அத்துடன் மாணவர்களுக்குரிய பாடசாலை உபகரணங்கள், குழந்தைகளுக்கான பால்மா என்பவற்றை வழங்கிவருகிறது.

தரை வழியாக வன்னிப் பகுதிக்கு நிவாரணப் பொருட்களை எடுத்து வருவதற்கு வசதியாகவவுனியாவில் மனித முன்னேற்ற நடுநிலைய அலுவலகம் ஒன்றும் திறக்கப்படவுள்ளது. இதற்கான கட்டட வேலைகள் நடைபெறுகின்றன.

## குருத்துவ வெள்ளி விழா காணும் அருட்தந்தை செலஸ்ரீன்

அருள் ஆச்சிரமத்தைச் சேர்ந்த அருட்தந்தை எம். ஜே. செலஸ்ரீன் தமது குருத்துவ வெள்ளி விழாவை 15-06-96இல் கொண்டாடினார்.

அவரது பணி சிறக்கவேண்டும் எனவும், மேலும் பல்லாண்டுகள் ஆன்ம உடல் நலத்துடன் வாழ்ந்து மக்களுக்கு சேவை செய்யவேண்டும் எனவும், வாழ்த்தி இறை ஆசிரை வேண்டுகிறோம்.

கடந்த ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்து சென்றபோதும் அவர் ஆச்சிரமத்தில் இருந்து பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## உறுதிப்பூசுதல் வழங்கப்பட்டது

வன்னிப்பெரு நிலப்பரப்பில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு உறுதிப்பூசுதல் திருவருட் சாதனத்தை ஆயர் வழங்கினார்.

வலைப்பாடு, அளம்பில் ஆகிய பங்குகளில் இத்திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இதனைப் பெற்றுக் கொண்டனர்.

## அருட்சகோதரியின் வெள்ளிவிழா

மீன் பாடும் தேன் நாடாம் மட்டுநகரில் பிறந்த கார்மேல் சபையைச் சேர்ந்த அருள் சகோதரி திரேஸ் நொயிலினின் துறவற வாழ்வின் 25 ஆம் ஆண்டு நிறைவு விழா 9-7-96ல் இவர் தற்போது சேவை செய்யும் இடமாகிய கரவெட்டியில் கொண்டாடப்பட்டது. இவருக்காகவும், இவரின் சேவைகளுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறும் முகமாக, அருள்திரு செல்வராஜா தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

**அடுத்த இதழ் ஒகஸ்ற் 23 இல்**

## குருமட புதிய அதிபர்

கிளிநொச்சியில் இயங்கும் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் அதிபராக அருட்திரு ஜே. நிக்கலஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்விதழுக்கான ஆக்கங்களைச் சேகரித்து, முழுமையாகத் தொகுக்கத் துணை செய்த திரு ரூபன் மரியராஜனுக்கு எமது நன்றிகள்

ஆ-ர்.

# " திருவிவிலியம் "
## விவிலிய பொது மொழிபெயர்ப்புப் பற்றிய
# தமிழக ஆயர்களின் சுற்றுமடல்

### ஒரு நற்செய்தி!

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் காட்டிய மறுமலர்ச்சிப் பார்வையில் நம்மைச் சூழ்ந்துள்ள பிற கிறிஸ்தவச் சபையினரோடு உறவுகளை வளர்த்துக் கொள்வதும் அடங்கும். அனைத்துக் கிறிஸ்தவ சபைகளுக்கும் அடிப்படையாக இருப்பது இறைவார்த்தையே. நம் அனைவரின் ஒற்றுமைக்கும் ஊற்றாக விளங்கவேண்டியதும் அந்த இறைவார்த்தையே. ஆனால் பல்வேறு கிறிஸ்தவ சபைகள் பல்வேறு விவிலிய மொழிபெயர்ப்புகளைப் பயன்படுத்தி வருவதால், ஒன்றுபடுத்த வேண்டிய அதே இறைவார்த்தையாலேயே நாம் பிரிந்து இருக்கின்றோம்.

கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டுள்ள அனைவரும் ஒருமித்துப் பயன்படுத்தக்கூடிய ஒரு பொதுவிவிலியம் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கும், ஏன்– அனைத்துக் கிறிஸ்தவர்களின் சான்று வாழ்வுக்கும் உறுதுணையாக இருக்கும் என்ற எண்ணத்தை 2ஆம் வத்திக்கான் சங்கம் உருவாக்கியது: "சூழ்நிலைப் பொருத்தமும், திருச்சபை அதிகாரிகளின் ஒப்புதலும் இருக்குமாயின், நம் பிரிந்த சகோதரர்களின் ஒத்துழைப்போடு விவிலிய மொழிபெயர்ப்புகள் செய்யப் படும்போது எல்லாக் கிறிஸ்தவர்களும் அவற்றைப் பயன்படுத்த இயலும்" (இறை வெளிப்பாடு – 22)

இப்பரிந்துரையின் அடிப்படையில், 1966 ஆம் ஆண்டு, கிறிஸ்தவ ஒன்றிப்பு மொழிபெயர்ப்புக்கு வழிகாட்டும் விதிகளை கத்தோலிக்கரின் கிறிஸ்தவ ஒன்றிப்புச் செயலகமும், ஏனைய கிறிஸ்தவர்களின் உலக விவிலியப் பேரவையும் சேர்ந்து வெளியிட்டன. இதன் விளைவாக உலகெங்கும் விவிலியத்தை இணைந்து மொழிபெயர்க்கும் பணியில் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாட்டிலும் ஏறக்குறைய சென்ற 23 ஆண்டுகளாகக் கத்தோலிக்கரும், ஏனைய சபையாரும் இப்பணியில் இணைந்து செயல்பட்டு வந்துள்ளனர். ஆயர்கள் கண்காணிப்பில் முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன் பலனாக, மூல மொழிகளினின்று இன்றைய காலத்திற்கு ஏற்ற தமிழில் மொழிபெயர்த்து ஒரு பொது விவிலியத்தை உருவாக்கும் பணியை நிறைவு செய்துள்ளனர். "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக" (யோவான் 17:21) என்னும் இயேசுவின் இறுதி விருப்பம் கடவுளின் வார்த்தையைப் பொறுத்த மட்டிலாவது நிறைவேறப்போகிறது என்பது நம் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியை அளிக்கும் நற்செய்தி என்பதில் ஐயமில்லை.

இந்தப் பொது விவிலியம் 'திருவிவிலியம்' பற்றிய சில கருத்துக்களை உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறோம்.



### எத்தனை நூல்கள் ?

பழைய ஏற்பாட்டுத் திருமுறையில் எத்தனை நூல்கள் என்பது பற்றிக் கிறிஸ்தவச் சபைகளுக்குள் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. கத்தோலிக்கரும், கீழைச் சபையினரும் 46 நூல்களைப் பழைய ஏற்பாட்டுத் திருமுறை நூல்களாக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் பிற கிறிஸ்தவச் சபையினரும், எபிரேய யூதர்களும் 39 நூல்களையே ஏற்றுக்கொள்கின்றனர். யூதித்து, தோபித்து, சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், பாருக்கு, 1, 2 மக்கபேயர் ஆகிய நூல்களையும், எஸ்தரின் கிரேக்கப்பகுதிகளையும், தானியேலின் இணைப்புக்களையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இவை இன்றைய கிறிஸ்தவ ஒன்றிப்பு சூழலிலே "இணைத் திருமுறை நூல்கள்" என வழங்கப்படுகின்றன. கிறிஸ்தவ ஒன்றிப்பு மொழிபெயர்ப்புக்கு வழிகாட்டும் விதிகளின் படி, முதலில் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட எபிரேயத் திருமுறையில் அடங்கும் 39 நூல்கள், அதன்பின் 7 இணைத்திருமுறை நூல்கள், இறுதியாகப் புதிய ஏற்பாட்டு நூல்கள் என்னும் வரிசையில் அச்சிடப்படுவதே முறையாக இருக்கும். இம்முறையில் பல விவிலியங்கள் ஆங்கில மொழியிலும், ஏனைய மொழிகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தமிழில் பொது விவிலியம் 73 நூல்களைக் கொண்ட (46+27) ஒரு தொகுப்பாக வெளியிடப்படுகிறது. 73 நூல்களையும் கொண்ட இந்த விவிலியப் பதிப்பு எல்லாக் கிறிஸ்தவராலும் பயன்படுத்தப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை என நம்ப இடம் இருக்கிறது.

### எது சரியானபெயர் ?

கத்தோலிக்கரும், பிற கிறிஸ்தவ சபையாரும் விவிலியத்தில் வரும் சில முக்கியமான ஆள்களுக்கு வெவ்வேறு பெயர்கள் கொடுத்து வந்திருக்கின்றோம். எடுத்துக்காட்டாக இஸ்ராயேல் – இஸ்ரவேல், மோயீசன் – மோசே, சாம்சன் –சிம்சன், இசையாஸ்-ஏசாயா பாலாம்–பிலெயாம், நாமான்–நாகமான் போன்றன. அது போலவே கத்தோலிக்க மரபிலே சில புதிய ஏற்பாட்டுப் பெயர்கள் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. இராயப்பர், அருளப்பர், சின்னப்பர் போன்றவை கிரேக்கப் பெயர்களின் மொழி பெயர்ப்புகளே. பெயர்களைப் பொறுத்த மட்டில் கிறிஸ்தவ உணர்வுடன் நல்ல உடன்பாடு ஏற்பட்டுள்ளது பாராட்டத் தக்கது. இஸ்ரவேல் என்பது தற்காலப் புவியியல், வரலாற்று நூல்கள் வழக்கப்படி இஸ்ரயேல் என மாற்றம் பெறுகிறது. மோசே, சிம்சோன், ஏசாயா ஆகியவை மூலமொழியாகிய எபிரேய ஒலிக்கு ஏற்ப அமைவதால் அவை ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. (மோயீசன், சாம்சன், இசையாஸ் என்பவை இலத்தீன் மொழித் தாக்கத்தால் வந்தவை. 'நாகமான்' என்பதை "நாமான்" என்பதே எபிரேய பெயர்களின் சிறப்பான ஒலி பெயர்ப்பாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. 'இராயப்பர்,' 'அருளப்பர்,' 'சின்னப்பர்' போன்ற ஏறக்குறைய 12 பெயர்கள் மட்டும் கத்தோலிக்க மரபிலே மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன விவிலியத்தில் வருகின்ற ஆயிரக்கணக்கான பிற பெயர்கள் மொழிபெயர்க்கப்படவில்லை. இயேசு, மரியா, மத்தேயு, மாற்கு, லூக்கா போன்ற மிக முக்கியமான பெயர்கள் கூட ஒலிபெயர்ப்பே செய்யப்பட்டுள்ளன. அதுவும் இப்பிரச்சனை தமிழ்மொழியில் மட்டுமே இருப்பதாகத் தெரிகிறது. பிறமொழிகளில் இவ்வித வேறுபாடுகள் இல்லை. தமிழில்கூடத் தொடக்கக் காலத்தில் போர்த்துக்கீசரின் தாக்கத்தால் இராயப்பர் 'பேதுரோ,' சின்னப்பர் 'பாவுலு' என்றே அழைக்கப் பட்டனர். பிற்காலத்தில்தான் தெலுங்கு மொழித் தாக்கத்தால் இராயப்பர் சின்னப்பர் என்னும் வழக்கு பரவலாயிற்று. இவை அனைத்தையும் திறந்த மனத்தோடு பார்க்கும்போது ஆட்களைக் குறிக்கும் சில பெயர்களை மட்டும் மொழிபெயர்ப்பு செய்வது சிறப்பான வழக்காகத் தென்படவில்லை. எனவே எல்லாப் பெயர்களையும் ஒலி பெயர்ப்பு செய்வதே உகந்தது என்னும் முடிவின் அடிப்படையில் இப்பெயர்கள் பேதுரு, யோவான், பவுல்... என்றாகின்றன.

இப்பெயர் மாற்றங்களை ஒரு சிலர் விரும்பாமல் இருக்கலாம். இவை ஒரு சிலரது உணர்வுகளைக்கூட புண்படுத்துபவையாக அமையலாம். கத்தோலிக்கர் சிலர், "நாம் 'புராட்டஸ்டாண்டுகளாக' ஆகிவிட்டோமா" என அங்கலாய்க்கலாம். பிற கிறிஸ்தவச் சபையினரும் இது போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தலாம். இவ்வுணர்வுகளை யாரும் அலட்சியம் செய்ய முடியாது எனினும். 'கிறிஸ்தவரிடையே ஒன்றிப்பு' என்னும் உயர்ந்த குறிக்கோளை நோக்கிச் செல்கையில் தியாகங்களைத் தவிர்க்க முடியுமா? நியாயமானவற்றை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாமையால் தானே காலப்போக்கில் இத்துணைப் பிரிவுகள்! கிறிஸ்துவின் நற்செய்தியை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தடையாக இருந்த புனிதமான, இரண்டாயிரம் ஆண்டுகளாக பழகிப் போன, தம் உடன்படிக்கைக்கு அடையாளமாக கடவுளே ஆபிரகாமுக்குக் கொடுத்த அந்த விருத்தசேதனத்தையே தூக்கி எறிந்த துணிச்சல், தொடக்கக் கால கிறிஸ்தவர்களுக்கு இருந்தது. இன்றும் கிறிஸ்தவரிடையே உள்ள பிளவுகள், நற்செய்தியைப் பலர் ஏற்றுக்கொள்ளத் தடையாக, இடையூறாக உள்ளன என வத்திக்கான் திருச்சங்கமே வருத்தத்துடன் கூறுகிறது. கிறிஸ்தவத்திற்கே எதிர்மறைச் சான்றாகவும், தடைக்கல்லாகவும் இருக்கும் இப்பிளவுகளைக் கடவுளின் வார்த்தையின் அடிப்படையில் போக்க முனையும்போது இப்பெயர்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## வன்னிப்பகுதியில் தற்போது பணிபுரியும் அருட் தந்தையர்கள்

| | |
|---|---|
| கிளிநொச்சி | — எஸ். ஜே. இராசநாயகம் |
| | — ஜீ. ஏ. பிரான்சிஸ் யோசவ் |
| மாங்குளம் | — எம். எக்ஸ். கருணாரட்ணம் |
| புதுக்குடியிருப்பு | — எவ். எல். என். சந்திரபோஸ் |
| புனித சவேரியார் குருமடம் — | ஜே. நிக்கலஸ் |
| | எஸ். ஜே. இம்மனுவேல் |
| | ரி. ஜே. கிருபாகரன் |
| | ஈ. ஜே. அருமைநாயகம் |
| | ரூபன் மரியாம்பிள்ளை |
| | எஸ். ஜெராட் |
| | அதிரியான் யோசவ் |
| | ஜீ. ஈ. மேரி ஜோசவ் |
| | அ. ஜெயபாலன் குருஸ் |
| ஆரோபணம் மாணவர் இல்லம் 8ஆம் வாய்க்கால் | — ஜேம்ஸ் பத்திநாதர் |
| உருத்திரபுரம் | — ஏ. சகாயதாசன் |
| 10ஆம் வாய்க்கால் | — ரி. ஏ. ஜே. மதுரநாயகம் |
| இன்பகம் | — எஸ். எச். ஜெபநேசன் |
| | — ஜே. பி. அன்ரனி |
| பரந்தன் | — சி. யே. அன்ரனி பாலா |
| அமதிபுரம் | — ஏ. ஜீவாபோல் |
| | — ஏ. எவ். செலஸ்ரின் மஸ்கிறிஞ்சி |
| | — ஜீ. அற்புதராஜா |
| வலைப்பாடு | — ஏ. லோறன்ஸ் |
| | — யோசப் பிரான்சிஸ் |
| முழங்காவில் | — எஸ். என். சி. ஞானராஜா |
| | — ஜே. சி. போல் றோகான் |
| குமுழமுனை | — எஸ்தாக்கு செபஸ்ரியன் |
| வட்டக்கச்சி | — எம். செபஸ்ரியன் |
| இரணைப்பாலை | — சி. ஜீ. ஜெயக்குமார் |
| கூழாமுறிப்பு | — எஸ். ஏ. ஜோர்ஜ் |
| வவுனிக்குளம் | — ஜே. ஜே. மௌலிஸ் |
| ம. மு. ந. நிலைய இணைப்பாளர் | — ரி. ஏ. தவராஜசிங்கம் |
| மேய்ப்புப்பணி நிலையம் கிளிநொச்சி | எம். ஈ. பயஸ்; என். கென்னடி |
| மாங்குளம் கல்குவாரி | யோயெல் (யேசு சபை); டானியல் (யேசு சபை) |
| பூனைத்தொடுவாய் | - ஜே. எக்ஸ் பேனாட் றெக்னோ |

## திருவிவிலியம்

| பழையது | புதியது |
|---|---|
| அருளப்பர் 15:1–2 | யோவான் 15:1–2 |
| 1. நானே உண்மையான திராட்சைக்கொடி; என் தந்தையே பயிரிடுபவர். | 1. உண்மையான திராட்சைச் செடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர். |
| 2. என் கிளைகளில் கனி கொடாத எக் கிளையையும் அவர் தறித்து விடுவார். கனிதரும் கிளையையோ மிகுந்த கனி தரும்படி கழித்து விடுவார். | 2. என்னிடமுள்ள கனி கொடாத கொடிகள் அனைத்தையும் அவர் தறித்துவிடுவார். கனி தரும் அனைத்துக் கொடிகளையும் மிகுந்த கனி தருமாறு கழித்து விடுவார். |

# சிந்திக்க ஒரு சிறுகதை

பொழுது புலர்ந்தும் புலராத அந்த விடிகாலை ஊரடங்கு ஆறு மணிவரைக்கும் என்ற நினைவுக்கப்பால் அன்றைய சோற்றுக்கு அரிசி இல்லை என்ற நினைவெழ முதல்நாள் கூலி வேலைக்குப் போய் கணவன் கொடுத்த காசையும் எடுத்துக்கொண்டு செல்லம்மா அவசர அவசரமாகக் 'சதொச' கியூவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். மூத்தவளை எழுப்பி "பிள்ளை பாணை வேண்டி அப்பாவுக்கும் குடுத்து நீங்களும் சாப்பிட்டு பள்ளிக்குப் போங்கோ" என்று கூறிவிட்டு, பதில் எதிர்பாராமல் விறுக்விறுக் கென்று நடந்து கொண்டிருந்தாள். சென்றியில் நின்றஆமிடோச் அடித்துப் பார்த்து "எங்கே போறது?" எனவும் "நான் சதொசாவுக்கு கியூ பிடிக்க போறனையா" என்றதும் அவனும் விலகி வழிவிட ஆத்துப் பறந்து கியூவை அடைந்தவளுக்கு அங்கே அதிர்ச்சி காத்திருந்தது. அவளுக்கு முதலே ஐம்பதுக்கு மேற்பட்டோர் போர்வைகளுடனும், சுருட்டுப் பற்றவைத்துக்கொண்டும், குறண்டிப் படுத்துக் கொண்டு தங்கள் இருப்பிடத்தை உறுதிசெய்து கொண்டிருந்தனர். இருநாட்களாக அரிசிக்கு அலைந்து கிடைக்காது இன்றைக்காவது மதியம் சோறு காச்சலாம் என்ற ஏக்கத்துடன் இவ்வளவு முந்தி வந்தபோதும் நின்ற சனங்களை பார்த்த போது நம்பிக்கை தளர்ந்து போனது. எனினும் தானும் ஓர் ஆளாய் கியூவில் அமர்ந்து கொண்டாள், தேத்தண்ணி குடிக்காமல் வந்தவளின் வயிறு புகைந்து கொண்டது. உள்புகின் பேசுவோரும், பழைய வாழ்க்கையை அசைபோடுவோருக்குள்ளும் ஏக்கம் கலந்த பெருமூச்சுடன் செல்லம்மாவும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். செக்கல் விலகத் தொடங்கி இருந்தது. படிப்படியாக ஆலயத்துக்குச் செல்வோரும் பள்ளிக்குச் செல்வோரும் வீதியை நிறைத்துக் கொண்டிருந்தனர். பள்ளிக்கூட மாணவன் கண்டதும் கியூவில் இருந்தவர்கள் அலுப்புமுறித்து சரியாகத் தங்கள் இடங்களில் நின்று கொண்டனர். நேரம் செல்லச் செல்ல புதிய புதிய முகங்கள் ஊரவே தொடங்கின. செல்லம்மாவின் கியூ நூறுபேரைத் தாண்டியது. இடையில் பூந்த ஆக்கள் தொடர்பான சிடுகிடுப்புக்கள், ஏக்கங்கள் எழுந்து கொண்டும் இருந்தன. பொருட்கள் கொடுக்க தொடங்கியதும் இடையில் ஊடுருவுவோர் தொகையும் அதிகரித்தது. பிந்திவந்த பலர் தமது செல்வாக்கை பயன்படுத்தி உள்ளே நுழைந்து பொருட்களுடன் திரும்பிக் கொண்டும் இருந்தனர். ஆனால் செல்லம்மா முன்னேற்ற மின்றியே நின்றிருந்தாள். சூரியனும் உச்சத்துக்கு வந்துகொண்டிருந்தான், பசிக்கும், களைப்புக்கும் அப்பால் அரிசி கிடைக்காது போய்விடுமே என்ற ஏக்கமே பெரிதாய் நின்றது. பின்னால் நின்ற ஒருவர் கியூவில் 'யாரையும் பூரவிடாதீர்கள்' என அறிவுரை கூறிக் கொண்டு அங்குமிங்கும் சென்றவர், திடீரென காணாமல் போய் பொருட்களுடன் வெளியேறிக் கொண்டிருந்தார். இரண்டு கிலோவாக இருந்த அரிசி நேரம் செல்ல ஒரு கிலோவாகியது. அதற்கிடையில் இடையில் நின்ற ஒருசிலரின் வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியது. கியூவரிசை உடைந்து பின்னாலே நின்றவர் பலர் முன்னே ஊடுருவினர். செல்லம்மாவின் நிலையோ பரிதாபகரமாய், இன்னும்பின்னுக்காய் ஆனது. மனதுக்குள் எழுந்த வெப்புசாரமும், ஏக்கமும், பெருமூச்சாய் வெளிப்பட்டுக் கொண்டது. எனினும் மனம் சோராமல் நின்ற பலருள் செல்லம்மாவும் நின்றிருந்தாள், வேகமாக சென்று கொண்டிருந்த கியூவரிசை திடீரென நின்றது. "அரிசி முடிஞ்சுதாம்", பலர் சினந்தபடியும், கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டும், புறுபுறுத்துக் கொண்டும் கியூவைவிட்டு சென்று கொண்டிருந்தனர். தூரத்தே செல்லம்மாவும் வெறும் பையைக் கொண்டு தளர் நடையுடன் சென்று கொண்டிருந்தாள்.

# ஒரே ஒரு ஊரிலே....

## 2. வறுமையினாலா? வெறுமையினாலா?

உண்மை விடுதலை தேடுவோருக்கு ஒரு சிறு பற்றும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்த்த குரு ஒருவர் தம் சீடர்களுக்குச் சொன்ன கதையிது.

அவன் ஒரு மலைப்பாதையூடாக குதிரையில் சென்று கொண்டிருந்தான்.

அந்தப்பகுதியில் அம்மலையைப் பற்றி ஒரு நம்பிக்கை இருந்தது. அந்த மலையில் உள்ள ஒரு குகை எப்போதாவது அதிசயமாக திறக்குமாம். சிறிது நேரம் வரை அவ்வாறே திறந்திருந்து பின்பு திடீரென மாயமாய் மூடிவிடுமாம். அதற்குள் உள்ளே சென்று வருபவர்கள் உள்ளிருக்கும் புதையலிலிருந்து தமக்கு வேண்டியவற்றை எடுத்து வரலாமாம். இதுதான் அந்த நம்பிக்கை.

அந்தக் குதிரையில் சென்று கொண்டிருந்த மனிதனுடைய நல்ல காலத்திற்கு அவன் கண் முன்பாக திடீரென குகை திறந்தது. ஆவலோடு உள்ளே நுழைந்தவன் அவசர அவசரமாக தன் குதிரை சுமக்கக் கூடிய செல்வங்களை அள்ளிக் கொண்டு வெளியே வந்தான். ஏனெனில் குகை சிறிது நேரத்தில் மூடிவிடும் என்பதை அவன் அறிந்திருந்தான்.

மகிழ்ச்சியோடு குதிரையில் ஏறிப் பயணிக்க இருந்தவனுக்கு திடீரென ஒரு நினைவு வந்தது. அவனது கைத்தடியை மறந்துபோய் அவன் குகைக்குள் வைத்து விட்டிருந்தான்.

நினைவு வந்ததும் உடனடியாக எடுத்து வந்து விடலாம் என்று மின்னல் வேகத்தில் குகைக்குள் நுழைந்தான். பாவம் அக்கணமே குகைவாயில் மாயமாய் மூடிக்கொண்டது.

குதிரை மட்டும் பெரும் செல்வத்துடன் அநாதரவாக வழியில் நின்றது.

பறவைகள் ஒரு கிளையில்தான் கூடு கட்டுகின்றன.

விலங்குகள் தம் வயிறு கொள்ளுமட்டும் தான் உணவுண்கின்றன.

நண்ப!

நீ பொருள் தேடுவது உன் வறுமையினாலா? அலல்து இதய வெறுமையினாலா?

# மீண்டும் குடியேறும் மக்களின் நம்பிக்கை வாழ்க்கை நிலைக்குமா?

அண்மைக்காலப் போரினால் யாழ். மறைவட்ட ஆலயங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு உள்ளது. பங்குமக்கள் தங்கள் இல்லங்களையும், பாடசாலைகளையும், ஆலயத்தையும் இடிபாடுகள் அகற்றும் பணியில் அக்கறையுடன் ஈடுபட்டு மீண்டும் வாழ்வைத் தொடர அரும்பணியாற்றி வருகிறார்கள்.

பல வருடங்களுக்கு மேலாக சேதப்படுத்தப்பட்டு காடு போல் பற்றைகளால் மூடப்பட்டு இருக்கும் இளவாலை, தீவக பகுதிகளுக்கும் மீண்டும் குடியமரச் சென்ற மக்கள் அதிகரிப்பதால் அந்தந்தப் பங்குகளிலே நிவாரணப் பணிகளையும், கல்விக்கூட ஒழுங்குகளையும் ஏற்படுத்தி போக்குவரத்துவசதிகளும் செய்யப் படுகின்றன. மீண்டும் குடியேறிய மக்கள் தம் ஆலயங்கள், பாடசாலைகள் வீதிகளை புனரமைப்பதில் ஈடுபட்டு வருவதும், ஆலய வழிபாடுகளுக்கு அக்கறையுடன் பங்கேற்று வருவதும் புதுத் தென்பையும் நம்பிக்கையையும் ஊட்டும் அன்றாடக் காட்சியாக உள்ளது.

இடம்பெயர்வால் அல்லல் பட்டு அனுபவித்த துன்ப துயரில் இருந்து சொந்த இடங்களில் புதுவாழ்வு தொடர இறைவன் அருளிய நன்மைத்தனத்துக்காகவும் நன்றிப்பலிகள் செலுத்துவதிலும் திருவிழாக்களைப் பக்தியுடன் கொண்டாடுவதிலும், உறவுகளைப் பிரிந்து வாழும் இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் சொந்த இடங்களில் குடியேற வேண்டுமென வழிபாடுகளில் பக்தியுடன் வேண்டுவதும் துயர்கள் எல்லாம் எம்மைத் தூய்மைப்படுத்தவே என ஏற்று உருக்கமுடன் வேண்டிக்கொள்வதும் மனதை உருக்கும் அன்றாடக் காட்சியாக உள்ளது.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## குருசுமுத்தண்ணையின் கிசுகிசு 91

குருசு: என்ன தம்பி துலையாலயே! இளைச்சுக் களைச்சு வாறாய்?

அடைக்கலம்: ஏன் அண்ணே? நீங்க ஏதோ குறைறவே! பாராததேசம் எல்லாம் பாத்து படிக்காத பாடம் எல்லாம் படிச்சு வாறம். இனியும் என்ன என்னவோ அதுதான்...

குருசு: அடதம்பி! இதிலகூட நன்மைதான் பாரு.

அடைக்கலம்: இதில என்ன அண்ணை நன்மை கிடக்கு?, இருந்ததையும் இழந்தது தானே மிச்சம்.

குருசு: இழந்ததை மட்டும் நினைச்சு கவலைப் படாத, நீ சொன்னியே பாராததேசம் எல்லாம் பாத்து, படிக்காத பாடம் எல்லாம் படிச்சம் எண்டு. அதுகூட நன்மை தானே பின்ன, ஆனா பாடம் படிச்சதால வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்படவேணும். இல்லாட்டி பழையகுட்டையில ஊறின மட்டயள்தான் பாரு.

# மனிதன்

மனிதன் என்பவன் யாவனவன் ?
மாண்புறு இலட்சியம் மதிநுட்பம்
இனிதாய் இன் சொல் தானுரைத்து,
என்றும் பிறருக் குதவி செய்து,
புனிதம், கருணை, பேரன்பு
பொறுமை, சாந்தம், மன்னிப்பெனும்
கனிந்த இதயத்தால் இறைவனை
காலமெல்லாம் துதிப்ப வனாம்!

★

உறைந்த பனிபோல் மனங்கொண்டு,
உலவும் பொய்மை, பகை நீக்கி,
கறைகள் பஞ்ச பாதகமும்,
கயமை சிறுமை தான்நீக்கி,
மறைகள் காட்டும் வழி பற்றி
தினமும் நடப்போன் மனிதனவன்.
இறைவன் தெரிந்து தான் வாழ
ஏற்ற இடமாம் இவன் மனமே.

★

மனிதன் படைப்பின் கொடுமுடியாம்.
மலரும் மனமாம் அவன் மனது.
மனிதன் இறைவன் சாயலென
மகிமை வேதம் கூறிடுதே
மனிதன் மனமே தூயாவி
மறைந்து வாழும் ஆலயமாம்.
இனிதே இதனை நாமறிந்து
என்றும் வாழின் மனிதனாவோம்!

றொ. அன்ரனி அனஸ்ரின்.
தாளையடி

# இழப்பின் துயரிலிருந்து மீண்டும் வாழ்வுக்கு

கடந்த போர்க்கால நிகழ்வுகளும், நடைபெற்று வரும் போரும் நம் மத்தியில் பல அழிவுகளையும் இழப்புக் களையும், துயரத்தையும் ஏற் படுத்தி வருகின்றன.

இந்த இழப்புக்கள் பல வடி வங்களில் தோன்றுகின்றன. அவை குடும்பத்திலுள்ள ஒரு வரின் மரணமாக இருக்கலாம், அன்புசெய்த ஒரு நண்பராக இருக்கலாம், உடலில் ஏற்பட்ட ஒரு காயத்தின் வழியாக உடலில் இழந்த ஒரு முக்கிய அங்கமாக இருக்கலாம். இன் னும் வீடு, முக்கிய ஆவணங் கள் (பிறப்பு,இறப்பு). சேர்த்து வைத்த சொத்துக்கள், பணம், நகை, உடுப்புகள், வாழ்ந்த இடம், சேர்ந்து வாழ்ந்த உற வினர் இவைகளும் இழப்புக் களை ஏற்படுத்துகின்றன.

ஓர் இழப்பு நேரும்போது அல்லது நேசிக்கப்பட்டவரோ, மிகவும் அரிய பொருள் ஒன்றோ இல்லாமல் போகும் போது ஒருவரது மனத்துள் ஏற்படும் செயல்களே இழப் புணர்வு என்று சொல்லப்படு கின்றது.

இழப்பில் துயருற்றிருப்பவர் உளவளத்துணை நாடிவரும் போது இழப்பின் காரணமாக அவருக்கு ஏற்பட்ட உணர்வு கள், சாதாரணமானவை என் றும், அவை மனித அனுபவங் கள் அடிப்படையாகக் கொண் டவையும் என்பதை உணர செய்தல் வேண்டும். மனதில் அமிழ்ந்திருக்கும் இந்த உணர்வுகளை மேலும் அடி மனதில் அடக்கி ஒடுக்காமல், தன்னில் இழப்புக்கு காரண மாக ஏற்பட்ட கசப்பான உணர்வுகளை, நோவுகளை, மனக் கிளர்ச்சிகளை வாய் மொழியாகவே பேசி வெளிப் படுத்த வைப்பது உளவளத் துணையாளர் கையாளவேண் டிய அடிப்படைத் திறன்களில் ஒன்றாகும்.

இழப்பில் துயருற்றிருப்பவர் உளவளத்துணையாளரின் உத வியுடன் தன் பிரச்சினையை ஊடகப்படுத்துவதன் மூலம் நம்பிக்கையின்மைக் கேற்ப ஆரோக்கியமான முறையில் மன அமைதிக்கு இடமளிக்கும் ஏதாகிலும் ஒரு வழிமுறையை நாளாந்த வேலைகளோடு கட்டாயமாக குறித்தளவு நேரம் ஒதுக்கி கையாளலாம். அல்லது குணங் குறிகளையும் நாளாந்த நிகழ்வுகளையும் குறித்து வைத்து காரண காரியத் தொடர்புகளை நீங்க ளாகவே விளங்கிக் கொள்வ தாலும் நோயின்கடுமையைக் குறைக்கலாம்.

உளநலமே உடல்நலத்திற்கு அதிமுக்கியமானது.

நோய்நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்.

உதவியற்ற தனிமையிலிரு ந்து விடுபடலாம், இல்லாவிடில் இந்த இழப்பின் துக்க உணர்வு அவர் மனதில் திரும்பத்திரும்ப ஞாபகத்தை ஏற்படுத்தி மனச் சோர்வுக்கு தள்ளி இறுதியில் தன் வாழ்வையே அவர் முடித் துக் கொள்ளும் அளவிற்கு தற்கொலை முயற்சியில் ஈடு படவாம்.

## இழப்பின் இறுக்கங்கள்

I அதிர்ச்சி

துயரத்தின் முதற்படி அதிர்ச்சியாகும். அதிர்ச்சியுறும் போது ஒருவர் வேறு எந்த உணர்வும் கொள்வதில்லை. இது ஒருவிதத்தில் மனம்மரத் துப்போதல் எனலாம்.

அதிர்ச்சியிலுள்ள நேர அளவு ஆளுக்கு ஆள் மாறுபடலாம். சில நிகழ்வுகளில் சம்பந்தப் பட்டவர்கள் இழப்பு செய்தி கிடைக்கப் பெற்றுச் சில நேரம் கழித்து அதிர்ச்சியடை கின்றனர்.

II மறுப்பு

இழப்பில் துயருற்றிருப்பவர் தனக்கு இந்த நிகழ்வு ஏற்பட்டி ருப்பதை ஏற்கமறுப்பார். அதி லும் அவருடைய கணவன் இறந்துவிட்டார் என்று சொன் னால் நம்பவே மாட்டார். சிலர் ஒருவர் மறைந்து பல ஆண்டு களுக்குப் பின்னும் அவர் இறந்துவிட்டார் என்று சொன் னால் நம்பவே மாட்டார். மறுப்பு இன்னொரு கூறு பாடாகும்.

III உணர்வெழுச்சிகள் எதிர்ச் செயல்

இழப்புணர்விலுள்ளவர்களிடம் பல்வேறுவிதமான உணர் வெழுச்சிகளின் எதிர்ச்செய்கை களைக் காணக்கூடியதாக இருக்கிறது. பெரும்பான்மை யானோர் ஆழ்ந்த வேதனைக் காளாகின்றனர். சிலர் தங்கள் மேலோ அல்லது இறந்த வரைக் கவனித்தவர்களிடமோ மருத்துவர்களிடமோ, உறவி னர்களிடமோ அல்லது வேலைக் காரனிடமோ கோபம் கொள் கின்றனர். இன்னும் சிலர், இறப்பதற்கு முன் இறந்தவர்க ளுக்குப் போதுமான அன்பு உதவி தாம் செய்யவில்லை யன்றோ, அவர் பால் இருந்த மனத்தாங்கலான உறவை சரிப்படுத்திக் கொள்ளவில்லை என்று தம்மீது குற்ற உணர் வைக் கொண்டிருப்பர். இன் னும் இறந்தவர் இறப்பதற்கு முன் சில வேளைகளில் அவர்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# யாரைத் தேடுகிறீர்கள் ?

எந்த சிறுவரும் பிறக்கும் போது தூயஉள்ளத்துடன் தான் பிறக்கின்றார்கள். அவர் கள் வாழ்வில் சூழலும், வழி காட்டலும்தான் நல்லவனாக வும் தீயவனாகவும் மாற்றி விடுகின்றன. சிறுவரிடத்தில் உள்ள பொறுப்புக்களை சமு தாயமும், பெற்றோர்களும் உதாசீனம் செய்துவிட்டால் அச்சமுதாயத்தில் உருவாகும் சிறுவர்களே பிற்கால சந்த திக்கு சவாலாக அமைந்து விடு கின்றார்கள். இதனைபொறுப் புள்ள பெற்றோரும் சமூக நலன் விரும்பிகளும் நன்கு உணர்ந்து கட்டிடங்களை அல்ல, மனித மனங்களை கட் டிடவேண்டிய காலம் இது என உணரவேண்டும்.

''சிறுவர்களை என்னிடத் தில் வரவிடுங்கள்'' என்ற யேசு பிரானின் அழைப்புக்கு யார் வழிகாட்டியாக இருக்கப் போகிறீர்கள்? ஆரம்பத்தில் சிறுவர்கள்தானே என தவறு களை தட்டிக்கழித்து அவர்களை உற்சாகப்படுத்தி விட்டால் அவர்களின் வார்த் தையும், வாழ்க்கையும் அழி வதுடன் சமுதாயத்திற்குமே பல யூதாசுகள் உருவாக நாமும் காரணராகிவிடுவோம்.

யேசுக் கிறிஸ்துவைத்தேடி அலையும் பெற்றோரே, பெரி யோரே, உங்கள் எதிரே எத் தனை சின்னஞ்சிறியவர் களைக் கடந்து செல்கிறீர்கள்? இவர்கள் வயதிலும் செயலி லும் சிறியவர்களாக இருப்ப தால் அக்கறைப்படாமல் விட்டு விட்டு இறைவனைத் தேடும் இதயங்களாக அலைப வருக்கே கிறிஸ்துவின் வார்த்தை அறைகூவல் விடுக் கின்றது: ''சின்னஞ் சிறிய இவர்களுள் ஒருவருக்கு நீங் கள் இவற்றை செய்த போதெல்லாம் எனக்கே செய் தீர்கள்'' என அழுத்தமாக கூறுகிறார்.

உண்மையை உணர்ந்தோ மானால் எம் எதிரே காணும் எத்தனை சிறுவர்கள் தினமும் வீதி ஓரத்திலும், கடைத் தெருக்களிலும் வழிகாட்டிகள் இன்றி தவறான வாழ்வு எது என தெரியாதும் அலைகி றார்கள். இவற்றை கண்டும் காணாதவர்களாக இறை வனைத்தேடி எங்கெங்கே செல்லுகிறீர்கள்? இவர்களில் ஒருவரை ஒருவர் தம் பொறுப்பு என உணர்ந்து செயல்பட்டாலே புதிய சமு தாயம் ஒன்று உருவாகும்.

உண்ணக்கொடுத்தோம், உடையைக்கொடுத்தோம் என பெருமைப்படாது வாழக் கற் றுக் கொடுத்தோமா? அறிவுப் பசியைத் தீர்க்க முனைந் தோமா? வழிகாட்டிகளாக

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## வாசக நெஞ்சங்களே!

வீட்டுக்கொரு பாதுகாவ லன் பெறுவதில் நீங்கள் செலுத்தும் ஆர்வம் எம்மை உற்சாகப்படுத்துகிறது. வாச கர் கருத்துக்கு களம் அமைத் துள்ளோம். உங்கள் கருத்துக் களை எழுதுங்கள்.

உங்கள் அயலவர், நண்பர் களுக்கு அறிமுகப்படுத்தி நற் செய்திக்குசாட்சியம் பகர்வதில் நீங்களும் பங்காளராகி புதிய வாசக நேயர்களை சென் றடையச் செய்யுங்கள்.

இது உங்கள் பத்திரிகை, அதன் வளர்ச்சியும் உங்களின் கைகளில்தான் உண்டு. புதிய படைப்பாளிகளே தயங்காமல் சுருக்கமாக எழுதுங்கள்.

—ஆசிரியர் குழு—



# வாசகர் கருத்து



...நீண்டகால இடைவெளிக் குப்பின் ஆண்டவன் அருளால் வேண்டிய தருணத்தில் வெளி வந்த பாதுகாவலனை வருக! வருக! என வாழ்த்துகிறேன். தகவல் தாகத்தினால் வருந் தும் எமக்கு அருந்தும் அருந்து மென, மறை சார் தகவல் களைத் தந்து தாகம் தணித்து மகிழ்வித்த காவலனுக்கு நன்றி கூறி வாழ்த்துகிறேன்.

ஒரு அபிமான வாசக நேயர்
சுண்டுக்குளி

* * *

......... எதிர் பார்ப்புக்கள் ஏமாற்றமாகிவிடுமோ என்பது எமது கவலை.

துயர்நிலை, தேவைகள் பல இருந்தும் இன்னும் இரண்டு மாதங்களின் பின் செல்லும் பயணம் முக்கிய செய்தியாக்கியதும் மேய்ப்புப் பணி காலத்தில் கூறிய ஆசிரி யர் குழு இயங்கத் தொடங்கி பின் இடம் பெயர்வின்போது ஆயர்களின் ஆசி உரைகளை விளம்பர பக்கங்களாக்கி பாது காவலன் சிறப்பிதழ் என வெளியிட்டு இரண்டு இதழி லும் ஆசிரியர் குழு மறைந்து போனதும் காவலன் கண்மணி, இளைஞர் அரங்கம் காணமுடி யாததும் மாதம் ஒன்று என தூரச் செல்வதும் கவலை தரு கின்றது.

கடமைக்காக வெளியிடுவ தைத் தவிர்த்து மக்கள் தொடர்புக்காக புதிய பணி கள் தொடரவேண்டும் என் பதே நம் ஆவல்.

A. தேவநேசன்
மானிப்பாய்

× × × ×

எழுதும் ஆற்றல் பலரிட முண்டு. பயனுள்ள பல விட யங்களை எழுத ஊக்குவிப் பது பயனுள்ள பணியாகும். ''அடுத்த இதழ் ஆடி 26 இல்வெளிவரும்.'' இது மிக நீண்டகால இடைவெளியை ஏற்படுத்துவதாய் உள்ளது. இருவார இடைவெளியும் நீண் டதுதான், வாராந்தம் ''காவ லன்'' வெளிவர வேண்டுமென் பதே எனது விருப்பமான வேண்டுதல்!

''வீட்டிற்கொரு பாதுகாவ லன்'' என்னும் உயரிய இலக்கை எட்டுவதில் பங்குத் தந்தையர், அருட்சகோதரி கள், பக்திச்சபையினர், பாட சாலை அதிபர்கள், ஆசிரியர் கள் அத்துடன் நல்லமனம் உள்ள பொதுமக்கள் மிகவும் உதவிசெய்யலாம்.

T. M. அந்தோனிப்பிள்ளை
குடும்பம், பாஷையூர்.

★ ★ ★

...இப்பத்திரிகையில் ஒன் றைத் தேடுகிறேன். காண வில்லை. என்ன அது? அது தான் இறைவார்த்தை. புலம் பல் ஆகமத்தில் ஒரு பகுதியை மாத்திரம் முன் பகுதியில் காணமுடிந்தது. உட்பகுதி களில் இறைவார்த்தையைக் காணவில்லை.

இன்று வேறு சபைகள் மிகத் தீவிரமாக இறை வார்த்தையை, விளக்கம் கொடுத்து வருகிறார்கள். நாங்கள் குழம்பியிருக்கிறோம். நீங்கள்தான் தெளிவுபடுத்த வேண்டும். எது உண்மை என்று தெரியவில்லை. தங்கள் பத்திரிகை மூலம் தான் இக் குழப்பங்களுக்கு விடை காண வேண்டும்.

இன்று பாவங்கள் நியாய மாக்கப்படுகின்றது.களவு எடுத் தாலும் பசிக்காகத்தானே ருசிக்காக இல்லை என்கிறார் கள். ஆகவே பாதுகாவலனே இறைமக்களின் கேள்விகளுக்கு விடை கூறவேண்டும்.

S. A. இராயன்

★ ★ ★

முன்னைய காவலனில் சிறு வருக்கும் பாடசாலை மாணவ உலகிற்கும் காவலன் கண்மணி என்ற பகுதி அன்பு விழியால் கடிதமாக வந்தது. இளைஞர்க்கென அன்பு நெஞ் சன் வி. பி ஆரம்பித்த இளை ஞர் உலகு யோகாவினால் சிறப்புற வழிநடத்தப்பட்டது. அத்தோடு குடும்பம் ஒரு கதம் பம் பகுதியும் குடும்பத்தின ருக்கென ஒதுக்கப்பட்டது. மீண்டும் அவைகள் புத்து ணர்வுபெற வேண்டுமென்றும், இக்காலகட்டத்தின் அனுப வங்கள் சிறுகதை, உருவகக் கதைகளாகவும் மிளிர வேண்டு மென்றும் விரும்புகின்றோம்.

1995 புரட்டாசி 23, 24-ம் நாள் நடந்த எழுத்துப் பயிற் சிப்பட்டறையின் உருவாக்கம் ஒரு மாதத்திலேயே இயங்க முடியாமல் போய்விட்டது. அதையும் மீள புணருத் தானம் செய்து இங்குள்ள இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் காவ லனுக்கு புதிய எழுத்து ஆளு நர்களின் பங்களிப்பும் கிடைக்கும் என்பதை தொடர்புச் சாதனத்தின் மேலாளர் என்ற முறையில் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

ச. நதிவளன். க. தர்சினி
அ. மிலாசி D. றெனால்ட்
S. அனுஷியா
பாக்கியநாதர் றோசா.
பே. செ. பிள்ளை

## ST. JOSEPH'S OMI JUNIORATE COLUMBUTHURAI, JAFFNA

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் தங்கியிருக்கும் மேற்படி இளநிலை குருமட மாணவர்கள், அருள் திரு பி. யேசுநேசனை கீழ் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

இக்குருமடத்தில் புதிதாக சேர விரும்பும் இளைஞர்களும் அருள் தந்தையுடன் தொடர்பு கொள்ளலாம்.

"வசந்தகம்"
சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். A/4/96

## மனித முன்னேற்ற நடுநிலையம் ஆசிரியர் தேவை

தையல், மனைப் பொருளியல் கற்பிக்க வல்ல, திறமையான தராதரமுள்ள ஓர் ஆசிரியர் எமக்குத் தேவையாக உள்ளது. இப்பணியை ஆற்ற விரும்புகின்றவர்கள் தகுந்த ஆவணங்களுடன் எம்மை எமது அலுவலகத்தில் (கிழமை நாட்களில்) வந்து சந்திக்க வேண்டுகின்றோம்.

இயக்குநர்
மனித முன்னேற்ற நிலையம்
தீயோகு வீதி
மத்தியூஸ் றோட்
யாழ்ப்பாணம்.

A/8/96

## நீங்காத நினைவின் 31ஆம் நாள்



"உலகில் நீயும் வாழ்ந்தகாலம்
உயர்ந்தவாழ்வின்பயணமே.
சேர்ந்த உறவும் இணைந்த
உள்ளமும்
தொடர்ந்து வாழும்
என்றுமே"

சுகந்தன் நவரட்ணசிங்கம்
(மாணவன் பரியோவான் கல்லூரி)

பிறப்பு: 29-04-76
இறப்பு: 04-07-96

இறையடி சேர்ந்த 31ஆம் நாள் 03-08-96 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வளன்புரம், கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் பலியில் அனைவரும் கலந்து ஒன்றாய் வழிபட அன்போடு அழைக்கிறோம்.

மறைவைக் கேட்டு எம் துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எம்நன்றிகள்.

இவரது பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரிகள்
G. E- நவரட்ணசிங்கம்
(தபால் அதிபர்)
குணசீலி நவரட்ணசிங்கம்
(மனையியல் ஆசிரியை)
சுகிர்தா சுகன்யா
(மாணவிகள் வேம்படி மகளிர் கல்லூரி)

தற்போதைய முகவரி:
951/10 வளன்புரம்,
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
நிரந்தர முகவரி:
போயிட்டி,
இளவாலை A/5/96

## வழிபாட்டு நாட்காட்டி 1996

ஆவணி—மார்கழி
வெளிவந்துவிட்டது
ரூபா 10

## 13ஆம் ஆண்டு நினைவு

அந்திரேஸ்பிள்ளை
விமலதாசன்

இறைவனின் சாயலில் 54-01-17
இறைவனின் நிறைவில் 83-07-24

"துன்புறுவோர்க்கு அன்பு செய்வதே கிறிஸ்துவைப் போல் நாம் அன்பு செய்வது."
— அ. விமலதாசன்
A/7/96

## யாரைத்...

நாம் வாழ்ந்து காட்டினோமா? என்று எமக்குள் கேட்பதுடன் நின்றுவிடாது, செயலில் இறங்கும் போது தான் இறைவனைக் கண்ட உணர்வினை அடைவோம். எம் பொறுப்புக்களை உணர்ந்து செயல்பட இதுவே தருணம். சின்னஞ்சிறுவர்களில் கிறிஸ்துவைக் காணும் கிறிஸ்தவர்களாக வாழ்வோம்.
திருமதி பி. எவ். சின்னத்துரை

## இறைபதம் சேர்ந்த தி. கு. கன்னியர்கள்

திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த அருட் சகோதரி மேரி அனன்சியற்றா தம்பிப்பிள்ளை 22-12-95 இலும், அருட்சகோதரி அடெலா றொட்றிகோ 24-12-95 இலும் அருட்சகோதரி மேரி லிகோரி வயித்தியாம்பிள்ளை 06-02-96 இலும், அருட்சகோதரி தியடொசியா மனுவேல்பிள்ளை 11-04-96 இலும், அருட்சகோதரி அனன்சியேசன் 11-07-96 இலும் இறைபதம் சேர்ந்துள்ளனர்.

## அஞ்சலிக்கின்றோம்

புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் ஏழு ஆண்டுகளாகப் பணிபுரிந்த ஊழியர் திரு. சலமோன் வின்சன் வியாதியினால் பீடிக்கப்பட்டு கிளிநொச்சியில் மரணமானார்.

அன்னாரின் ஆத்மாவுக்காக பிரார்த்திக்கும் அதேவேளையில் அவரின் மனைவி, மகன், பெற்றார், உற்றாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

அதிபரும் சக ஊழியர்களும்

## நீங்காத நினைவில் எட்டாம் நாள்



செல்வி ஆன் சிந்துஜா கலிஸ்ரஸ்

மலர்வு 15-10-92
உதிர்வு 19-07-96

*சின்ன யேசுவே! சின்னஞ்சிறு றோஜா மலரான ஆன் சிந்துஜாவை உம்மை முகமுகமாய்த் தரிசித்திருக்கும் சம்மனசுகளின் திருக்கூட்டத்தில் சேர்த்தருளப் பிரார்த்திக்கின்றோம்.*

இவவின் தந்தை திரு. யோசப் கலிஸ்ரஸ் [ICRC] தாயார் திருமதி யசிந்தா கலிஸ்ரஸ் [புனித பத்திரிசியார் கல்லூரி] சகோதரன் செல்வன் ஜெறி பிறண்டன் [புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்] இவர்களுக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைக் கூறி நிற்கிறோம்.

திருமதி இரத்தினம் சூசைப்பிள்ளையும்
பிள்ளைகளும்
இல. 3, மாட்டின் ஒழுங்கை
யாழ்ப்பாணம் A/6/96

## மீண்டும் குடியேறு...

மக்களின் அபிலாசைகளை உணர்ந்து பொறுப்புள்ள தலைமைகள் தம் பணிகளை மேற்கொள்ள ஆன்மீக பலத்தில் நம்பிக்கை வைத்து ஒவ்வொரு மக்களும் செயற்படவேண்டிய காலமிதுவே. இதை உணர்ந்தவர்களாக வழிபாடுகளிலும் வாழ்க்கை முறையிலும் நம்பிக்கை தரும் செய்திகளைப் பகிர்ந்து நிரந்தர அமைதி, சமாதானத்திற்காக உழைப்பதே இன்றைய தேவையுமாகும்.

## நேர் காணல் > திருமதி M.மரியதாஸ்
ஓய்வு பெற்ற ஆசிரியை

● உங்களைப் பற்றி ...

பாதுகாவலன் வாசகர்களுக்கு என்னைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. 'நவாலியூர் நாயகி' என்ற புனைப் பெயரில் கடந்த 35 வருடங்களாக கவிதைகள் எழுதிக்கொண்டிருக்கிறேன். நான் ஒரு ஓய்வுபெற்ற ஆசிரியை. வழிபாடுகளில் இசைப் பங்களிப்புச் செய்பவள்.

● இடம்பெயர்வின் போது ஆன்மீக ஆவல் எப்படி இருந்தது? அதற்கான ஊக்குவிப்புகள் பொதுநிலையினருக்கு ஏற்றதாய் அமைந்ததா?

ஆன்மீக ஆவல் என்று அப்படியொன்றும் பெரிதாய் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் எனது துயரங்களையும் ஏனைய பொதுநிலையினரின் துயரங்களையும் கவிதை வடிவில் ஆண்டவனுக்கு எடுத்துக்கூறிய நிகழ்வுகள் எனக்கும் அவர்களுக்கும் பெரிதும் ஆறுதலைத் தந்ததென்பது உண்மை.

● இடம்பெயர்வின் தாக்கம் இறைஉணர்வை அதிகரித்ததா? அன்றி......

என்னைப் பொறுத்தவரை இந்த இடம்பெயர்வு ஆண்டவனோடு மிக நெருக்கமாகப் போய்க்கொண்டிருக்கின்ற ஓர் உணர்வை ஏற்படுத்தியதென்றே சொல்லுவேன்.

● மக்களை வெறுமைப்படுத்திய அந்த நிகழ்வு கட்டாயப் படுத்தலா? அன்றி இறைசித்தமென்ற உணர்வைத் தந்ததா?

இடம் பெயர்ந்து கொண்டிருக்கும்போது கட்டாயப் படுத்தலால் ஏற்பட்ட பயங்கரமான மனத்தாக்கம் இருந்தாலும் 6 மாதங்களாக ஒரு புதிய சூழ்நிலையில் பெரும்மனச் சுமைகளோடு வாழ்ந்தபோது அது இறைசித்தம் என்ற உணர்வைத் தந்தது.

● அந்த அனுபவம் வாழ்வில் மாற்றங்களைத் தந்ததா?

நிச்சயமாக எமது இறுக்கமான பிடிகளிலிருந்து நம்மைத் தளர்த்தியது. சமத்துவம், பகிர்ந்து வாழ்தலின் அவசியம் போன்றவற்றை உணர்த்தியது.

● பிறசமய சகோதர உறவுக்கு சாட்சிபகர உதவியதா?

ஆம்! நாம் வாழ்ந்ததே பிறசமய சகோதரர் ஒருவரின் வீட்டில்தான். அவர்களது அன்பும் பண்பும் எம்மை மெய்சிலிர்க்க வைத்தது.

● பாதுகாவலன் வாசகருடன் பகிர விரும்புவது......

ஆண்டவரின் இரண்டாவது வருகைக்கு எம்மை ஆயத்தப்படுத்துகின்ற ஒரு காலகட்டத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே எமது நடை உடை பாவனைகளில் தூய்மை கண்டிப்பாக இருக்கவேண்டும் என்றும் மாதா கேட்டுக்கொண்டதுபோல், செபமும், தபமும் எமது வாழ்வில் இரண்டறக் கலந்தால்தான் கடவுளின் தண்டனைகளிலிருந்து தப்பமுடியும் என்பதையும் பணிவோடு கூறி விடைபெறுகின்றேன்.

## இழப்பின்...

இறந்துவிடமாட்டாரா என்று நாம் மனதில் விரும்பியதை எண்ணும்போது குற்ற உணர்வு கொள்வார்கள்.

VI மனச்சோர்வு : உணர்ச்சிகள் அடக்கி வைக்கும்போது தளர்வு நிலை உண்டாகிறது. இழப்புணர்வுடன் இருப்பது தீவிரமான வேதனையுடன் இருத்தலாகும். இவ்வேதனை அதிக அளவு வெளிப்படாமல் இருந்தால் இழப்புணர்வுடன் இருப்பவர் மனச் சோர்வு நிலைக்கு தள்ளப்படுகின்றார்.

V வெளியிடுதல் : சொற்களால் பரிமாறிக்கொள்வதன் மூலம் இந்த உணர்வுகள் யாவும் வெளியேற வழியேற்படுகின்றது. பல வேளைகளில் சொற்கள்மூலம் பரிமாறிக்கொள்வது இழப்புணர்வில் இருப்பவர்களுக்குப் போதுமானதாக அமைவதில்லை. ஆகவே சிலர் கதறிக் கதறி அழுவார்கள், இந்த வெளியீடு நல்லதும் முக்கியமானதுமாகும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் தம்முடைய முன்னைய அனுபவங்களில் மறுபடியும் வாழ்வு நிலைகளாக மாற்றி நிம்மதியைப் பெறுகின்றார்கள்.

VI நினைவுக்கு கொண்டுவருதல்

இறந்தவர்களுடன் அவர்கள் இறப்பதற்கு முன் பெற்ற அனுபவங்களை மனிதர்கள் நினைவுக்குக் கொண்டுவந்து நினைத்துக் கொண்டிருப்பர். வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளும் தம்முடைய அன்புக்குரியவரை நினைவுறுத்துகின்ற இழப்புணர்வுடன் இருப்பவர்களுக்கு இறந்தவர்களிடம் தாம் கண்ட நல்ல தன்மைகளே நினைவுகளாக முதலில் வரும். பின்னர் அவர்களின் மகிழ்ச்சியற்ற, வேண்டா வெறுப்பான நினைவுகளும் வரும்.

VII சரிப்படுத்திக் கொள்ளுதல்

நேசிக்கப்பட்ட ஒருவரின் மரணம் குடும்ப இயக்கங்களை சீர்குலைத்து விடுகிறது. அவரின் இழப்பு அவர் செய்து வந்த பணிகளை இன்னொருவர் பொறுப்பேற்று செய்திட வேண்டியிருக்கிறது குடும்பத்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

# எம்கருத்து

நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த வேதாகமத்தின் புதிய பொது மொழிபெயர்ப்பு கடந்த ஆண்டு நவம்பரில் திருவிவிலியம் என்ற பெயரில் வெளியிடப்பட்டது. பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் இப் புதிய திருவிவிலியத்தின் பிரதிகள் எமது மறை மாவட்டங்களுக்கும் படிப்படியாக வந்து சேர்கின்றன.

2ஆம் வத்திக்கான் சங்கத்தின் ஊக்குவிப்பின் பயனாக (இறை வெளிப்பாடு, 22), பல்வேறு கிறிஸ்தவ சபைகளுடன் இணைந்து, புரிதல் — விட்டுக் கொடுத்தல் — உண்மைக்கே முதலிடம் போன்ற பண்புகளை மனதிற் கொண்டு செய்யப்பட்ட இம்மாபெரும் முயற்சியை நாம் பாராட்டுகிறோம்.

எனினும் இப்புதிய முயற்சி எதற்காக, அத்துடன் வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளுடன் இணைந்து செயற்பட்டதன் பயனாக எமது பாரம்பரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டுமா என்ற கேள்வி எழுப்புவோர் இல்லாமலில்லை. புதியன எப்போதும் சிக்கல்களை உருவாக்கலாம். விவிலியத்தைப் பொறுத்தளவிலும் புதிய மொழிபெயர்ப்புக்கள் ஒருபோதும் உடனடியாகவும், முழுமையாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை. ஆனால் அவை காலப்போக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டன; திருவிவிலியமும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது எமது நம்பிக்கை.

"நான் கூறிய வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன" என்றார் இயேசு (யோவான் 6:63), "எந்த ஆவியால் திருவிவிலியம் எழுதப்பட்டதோ, அதே ஆவியானவரின் துணைகொண்டு, அதை நாம் படிக்கவும் அதற்குப் பொருள் விளக்கம் செய்யவும் வேண்டும்" (இறை வெளிப்பாடு, 12). இன்றைய மனிதன் வாழ்வதற்கு ஏற்ப இறைவார்த்தையைப் புரிவதற்கு ஏதுவாக இப்புதிய மொழிபெயர்ப்பு துணை செய்வது ஆவியானவரின் தொடர்ச்சியான செயற்பாடுக்கு சாட்சியம் பகர்கின்றது என்று நாம் துணிவோடு கூறலாம்.

"என் ஆண்டவராம் இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம்" (பிலி. 3:8). இவ்வார்த்தை இன்று ஒவ்வொருவரினதும் "பாதைக்கு ஒளியாகத் திகழ" வேண்டும் (திருப்பாடல் 119:105) என்ற உயரிய நோக்கத்துடனேயே, இத்தனை விவிலிய-மொழியியல் அறிஞர்களும், ஏனையோரும் பல ஆண்டுகளாகப் பணியாற்றியுள்ளனர்.

எமைச் சூழ வாழும் கிறிஸ்தவ சகோதரருடன் இணைந்து இத்திருவிவிலியத்தைப் பயன்படுத்தும்போது, போர்களும் நம்பிக்கையீனங்களும் நிறைந்த எமது சூழலிலே 'ஒன்றுபட்டு' இறை அன்புக்கு நாம் சாட்சிகளாக இருப்போம் என்பதில் ஐயமில்லை.

இப்புதிய திருவிவிலியம் வெறும் அழகுப் பொருளாக மாறாது, தனித்தும், குடும்பமாகவும், குழுமங்களாகவும், பங்காகவும் அடிக்கடி வாசித்து, படித்து, தியானித்து, செபித்து அதன் ஒளியில் ஒன்றுபட்டு வாழ்வதே கிறிஸ்தவ வாழ்வு என்பதை உணர்ந்து, திருவிவிலியத்தை நாம் அனைவரும் பல்வேறு வழிகளிற் பயன்படுத்த எம் ஆசிகள்.

## மீண்டும்

### திருமறைக் கலாமன்றம்

யாழ். திருமறைக்கலாமன்றம் பிரதான வீதியில் உள்ள அதன் கட்டடத்தில் மீண்டும் இயங்குகின்றது.

இம் மன்றத்தின் 'களப் பயிற்சி' ஒவ்வொரு ஞாயிறும் மாலை 4.30 மணிக்கு நடைபெற்று வருகின்றது. கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் பஜனை வழிபாடு என்பனவும் இடம்பெறுகின்றன.

க. பொ. த. (சா. த.) (உ. த.) மாணவர்களுக்கான சங்கீத நடன வகுப்புக்களும் ஆரம்பமாகியுள்ளன.

மன்றம் அதன் கலைப் பணியை முழுமையாகத் தொடர சகல கலைஞர்களதும் முழு ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றது.

## விவிலிய……

களைப் பொறுத்தமட்டில் எல்லாரும் ஒருசில மாற்றங்களை ஏற்கத் தயாராகவேண்டும். கிறிஸ்துவின் சீடர் அனைவரின் ஒற்றுமை என்னும் உயர்ந்த இலட்சியத்திற்காக நியாயமானவற்றை விட்டுக் கொடுக்க, சில தியாகங்களைச் செய்ய எல்லாக் கிறிஸ்தவரும் முன்வருவதே நம் ஆண்டவர் இயேசுவின் உள்ளத்திற்கு உகந்த செயலாக இருக்கும். இதே மனப்பான்மையுடன் கத்தோலிக்க ஆயர்களும், கத்தோலிக்கரல்லாத பிற ஆயர்களும் ஏற்கெனவே இப்பெயர்களை ஏற்றுக் கொண்டுவிட்டனர்.

## இழப்பின்…

தைக் கவனிக்க வேண்டிய பொறுப்பும் வரலாம். குடும்பத்தில் முன்னர் இருந்த சமன்பாட்டை மீண்டும் நிலைநிறுத்தக் காலமெடுக்கலாம். ஆனால் காலப்போக்கில் பிரச்சனைகளைச் சரிப்படுத்திக் கொண்டு நிலைமைக்கேற்ப செயலாற்றும் நிலைக்கு வந்துவிடுகிறார்கள்.

VIII ஏற்றுக்கொள்ளுதல்

நாட்கள் செல்லச் செல்ல இழப்புணர்வில் உள்ளவர்கள் இழப்புணர்வை எதிர்கொண்டு வரும்போது அதனை ஏற்றுக் கொள்ளும் நிலை எழுகிறது. நினைவுகள் ஒருபோதும் மறைவதில்லை. ஆனால் வேதனை நாளடைவில் குறைந்து மறைகிறது. இங்கு தான் உளவளத் துணையாளரின் உதவி தேவைப்படுகிறது.

எனவே துணையாளர் துணை நாடி வருபவருக்கு பின்வரும் வழிகளில் உதவி செய்யலாம்.

செவிமடுத்தல்

உளவளத் துணையாளர் துணை நாடி வருபவர் சொல்வதைக் கேட்டு அவர் மனதில் ஏற்பட்டிருக்கும் புண்களையும், நினைவுகளையும், மொத்த அனுபவத்தையும் வெளியிடுமாறு ஊக்குவித்தல்வேண்டும்.

மறுபடியும் வாழ்தல்

உளவளத் துணையாளர் துணை நாடி வருபவரை அவரது முந்திய அனுபவங்களில் மறுபடியும் வாழுமாறு செய்தல் வேண்டும். ஒருவர் மறுபடியும் வாழும்போது தான் அவரால் நிம்மதி உணர்வைப் பெறமுடிகிறது.

முடியாதிருப்பதை முடித்துக் கொள்ளுதல்

துணை நாடி வருபவரிடம் இறந்தவரிடம் சொல்ல விரும்பிய ஆனால் அவர் உயிருடன் இருந்தபோது சொல்லாமல் விட்ட அனைத்தையும் சொல்லுமாறு செய்து விடைகொடுக்க துணையார் உதவி செய்தல் வேண்டும்.

— துணை நாடி வருபவர் கண்ணீர் விட விரும்பினால் அவர்கள் அழ ஊக்கப்படுத்த வேண்டும். கண்ணீர் சொரிய விடுவதும் அவ்வாறு ஊக்கப்படுத்துவதும் ஆலோசனையாளரின் முக்கிய பணியாகும், கண்ணீரை அடக்கினால் பாதிப்பு உண்டாகும்.

— அதிர்ச்சி நிலைகளில் ஒருவர் செயலற்றுப்போய் விழுவதால் நடைமுறைக் காரியங்களில் உறவினர்களும், நண்பர்களும் அவருக்கு உதவி புரிவது அவருக்கு பேருதவியாகும். எனினும் எல்லாவற்றிலும் முடிவெடுக்கும் உதவியை அவரிடம் இருந்து எடுத்துக்கொள்ளக் கூடாது.

— உணர்வெழுச்சியின் செயற்பாடுகளில் ஒன்று அன்றாடச் செயல்களில் இருந்து பின்வாங்கிக் கொள்வது. இது முற்றிலும் பரிந்துகொள்ளக் கூடியதே என்றும் அத்தகையவர்களை சிறிது சிறிதாக செயல்களில் ஈடுபடுமாறு ஊக்கப்படுத்துவது முக்கியமானதாகும்.

எஸ். டி.

## சினிமாவில் சீர்கேடு

ஆபாச, கொலை, கொள்ளை வன்செயல்களை சித்தரிக்கும் சினிமாப்படங்களால் ஏற்படும் தீமைகளைக் கண்டித்து இந்திய மத்திய அரசிடம் சர்வமத ஆன்மீகத்தலைவர்களும், பாடசாலை அதிபர் ஆசிரியர்களும் அவற்றைத் தணிக்கை செய்ய, அவற்றை தொலைக் காட்சிகளில் வெளியிடுவதை தணிக்கை செய்யும்படி கோரி இந்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். குடும்பமாக ஒன்றிணைந்து பார்க்கமுடியாதுள்ள இன்றய தொலைக் காட்சியில் பொழுது போக்கிற்கு என வெளியிடப்படும் சினிமாப் படங்களில் கிறிஸ்தவ விழுமியங்கள் சிதைக்கப்படுவதையும், மனித மாண்பு மதிப்பற்று போவதற்கும், சிறுவர் உள்ளங்களில் சிறிது சிறிதாக விதைக்கப்படும் தீய சிந்தனைகளைக்களைய முயற்சிக்கப்படுவது பலராலும் வரவேற்கப்பட்டாலும் இவை எம்நாட்டிலும் தடைசெய்யப்பட குரல் கொடுக்க பொறுப்புள்ளவர்கள் முன்வருவார்களா?

## ஆலய விழாக்கள்

### பாசையூரில்

பாஷையூர் புனித அந்தோனியார் திருநாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள், திருப்பலிகள் நடைபெற்றன.

### தாளையடியில்

உயிரிழப்புகள் பொருளிழப்புக்கள் ஒருபுறம்; இடம்பெயர்வுகளால் அறுபட்ட தொடர்புகள் மறுபுறம். இக்கட்டான இந்நிலமையின் மத்தியிலே செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயவிழாவும், தாளையடி புனித அந்தோனியார் ஆலயவிழாவும் மிக எளிமையான முறையில் பொருள் பொதிந்த விழாவாக அருள் தந்தை யாவிசின் தலைமையில் நடந்தேறியது.

### சுண்டுக்குளியில்

யாழ். புனித யுவானியார் ஆலய வருடாந்த உற்சவம் 15-06-96 கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நவநாட்கள், வழிபாடுகள், திருப்பலி என்பனவும் இடம்பெற்றன.

### பண்டத்தரிப்பில்

பண்டத்தரிப்பு பற்றிமா மாதா ஆலய திருநாள் 13-05-96 அமைதியாகக் கொண்டாடப்பட்டது.

இதேபோல பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலய திருநாளும் ஆனி 13 காலை திருப்பலியுடன் நடைபெற்றது.

### நல்லூரில்

ஷெல் தாக்குதல்களால் சேதமான நிலையில் உள்ள நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய திருநாள் அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

### நாரந்தனையில்

கடந்த ஆறு வருடங்களுக்குப் பின்னர் நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலய திருநாள் ஆனி 29இல் சிறப்பாக நடைபெற்றது. இதே போல நவாலி புனித இராயப்பர் ஆலய திருநாளும் நடைபெற்றது.

★ தீமையை தேடாதீர்கள், நன்மையை நாடுங்கள் ★

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1996 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.